**செ. கு. எண்: 81** **நாள்: 21.03.2013**

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 21.3.2013

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், வாளாடி கிராமம், திருச்சிராப்பள்ளி – சிதம்பரம் சாலையில் 17.3.2013 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த சிறுமயங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமன் என்பவரின் மகன் கோபிநாத் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த கோபிநாத்தின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில், திரு. செபஸ்தியார் என்பவரின் மகன் திரு. ஜெனிஃபர் பலத்த காயம் அடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் காலமான கோபிநாத் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு. ஜெனிஃபருக்கு 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**